## IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE DHARMAPURI

O.S No. 266 of 2022
Deposition of D.W.1
Name of the Witness: திரு. சாதிக்பாசா
Date : 11.02.2026

**மனுவின் பேரில் சாட்சி அழைக்கப்பட்டு முதல் விசாரணை**

| வரிசை எண் | நாள் | ஆவணத்தின் விவரம் | ஆவணத்தின் தன்மை | ஆவணத்தின் குறியீடு |
|---|---|---|---|---|
| 1 | -- | வில்லங்க சான்றிதழ் | சான்றிட்ட நகல் | பி.சா.ஆ.1 |
| 2 | -- | வில்லங்க சான்றிதழ் | கணினி நகல் | பி.சா.ஆ.2 |
| 3 | -- | தினபூமி நாளிதழ் விளம்பரம் | அசல் | பி.சா.ஆ.3 |
| 4 | 19.08.2016 | கிரைய ஒப்பந்தத்தின் அசல் கிரைய ஆவணம் | அசல் | பி.சா.ஆ.4 |
| 5 | 03.03.2019 | பொது அதிகார பத்திரம் | அசல் | பி.சா.ஆ.5 |

ஆக குறியீடு செய்யப்படுகிறது.

வாதி தரப்பில் ஆவணம் குறியீடு செய்ய ஆட்சேபனை செய்யப்பட்டது, வாதி தரப்பு ஆட்சேபனைக்கும் நிருபணத்திற்கும் உட்பட்டு ஆவணம் குறியீடு செய்யப்படுகிறது

**குறுக்கு விசாரணை**

வில்லங்க சான்றிதழை கிரையம் செய்ததை காட்டுவதற்காக தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்த வில்லங்க சான்றிதழில் என்னுடைய தந்தை ஏற்படுத்திய தாவா கிரைய ஒப்பந்தத்தை தவிர வேறு எந்த வில்லங்கமும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். தினபூமி நாளிதழில் கொடுக்கப்பட்டுள்ள விளம்பரம் கிரைய ஒப்பந்தம் ஏற்பட பிறகு ஏற்பட்டது என்றால் சரிதான். பி.சா.ஆ.4 கிரைய ஒப்பந்தம் பதிவு செய்யப்படாதது என்றால் சரிதான். வாதியின் தாயார் விசாலாட்சி என்பவரிடம் எனது தந்தை ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்ட தேதியிலேயே விசாலாட்சி நடேசனுக்கு

ஏற்படுத்தப்பட்ட கிரைய ஒப்பந்த ஆவணம் என்றால் சரிதான். பி.சா.ஆ4ல் என் அப்பா தரப்பினர் இல்லை என்றால் சரிதான். அதில் என் அப்பாவிடம் பணம் வாங்கியதாக எந்த குறிப்பும் இல்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் நடேசன் தரப்பினர் இல்லை என்றால் சரிதான்.

2) வாதி சரளா என் அப்பாவிடம் நடேசனுக்கு செட்டில்மெண்ட் செய்ய வேண்டும் என்று பணம் கேட்டார், என் அப்பா அவருக்கு ரூபாய் 16 லட்சம் பணம் கொடுத்தார். அதனை சரளா நடேசனிடம் கொடுத்து விட்டு நடேசனிடம் பி.வா.சா.ஆ.4ஐ வாங்கி என் அப்பாவிடம் கொடுத்தார். பி.சா.ஆ.4ல் குறிப்பிட்டுள்ள பணம் நடேசனுக்கு கொடுத்து செட்டில் செய்து கொடுக்கப்பட்டு விட்டது. என் தந்தை பணம் கொடுத்ததற்கு தாவா கிரைய ஒப்பந்தத்தை தவிர வேறு ஆவணம் இல்லை என்றால் சரிதான்.

3) பி.வா.சா.ஆ.5 பொது அதிகார பத்திரம் பதிவு செய்யப்படாதது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.5 வாதிகள் ராமசாமி பெயரில் எழுதி கொடுத்த பொது அதிகார பத்திரம் என்றால் சரிதான். ராமசாமி இந்த வழக்கில் தரப்பினர் இல்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.5ஐ ரவி எனது அப்பாவிடம் கொடுத்தார். பி.சா.ஆ.5 அடிப்படையில் தாவா சொத்து குறித்து எந்த ஆவணமும் ஏற்படவில்லை என்றால் சரிதான். நான் ஒப்படைத்திருக்கும் ஆவணத்திற்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. வாதி கேட்டபடி வழக்கு தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.